[2015 மார்ச் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

71—

கால்நடைக் கிளை நிலையக் கட்டடம்

***52735—திருமதி எல். ஜெயசுதா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம், அல்லியாளமங்கலத்திலுள்ள கால்நடைக் கிளை நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலை குலைந்தாலும் நிலை குலையாத மாணிக்கத் தலைவி மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சேத்துப்பட்டு ஒன்றியம், அல்லியாளமங்கலத்திலுள்ள கால்நடைக் கிளை நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா என்று கேட்டிருக்கிறார்கள். திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம், அல்லியாளமங்கலம் கிராமத்திலே கால்நடைக் கிளை நிலையம் ஒன்று துவங்கப்பட்டு, கிராமப் பஞ்சாயத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட கட்டடத்திலே தற்போது இயங்கி வருகிறது. அரசின் கொள்கை முடிவின்படி, கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை மருத்துவமனைகளுக்குத்தான் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு விதிகளிலே இடம் உள்ளது. எனவே, வருங்காலங்களில் மேற்படி கால்நடைக் கிளை நிலையம் அரசு விதிகளுக்குட்பட்டு கால்நடைக் மருந்தகமாகத் தரமுயர்த்தப்படும்போது, சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 *மார்ச்* 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா, இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

72—

ஜவுளிப் பூங்கா

***52485—திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 11-05

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாவின் அறிவாற்றல், பொன்மனச் செம்மலின் அருட்குணம், பாரதம் கண்ட பகுத்தறிவுப் போர்வாள், தமிழக மக்களைக் காக்கும் காவல் தெய்வம், தமிழக மக்களின் ஒளி விளக்கு, தமிழினத்தின் குல விளக்கு, எங்கள் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியுள்ளார்கள். சங்கரன்கோவில் தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், அப்பகுதியில் உள்ள தொழில்முனைவோர் ஜவுளிப் பூங்கா அமைக்க முன்வரும்பட்சத்தில், ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டத்தின் மூலமாக ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறும் இவ்வரசு, கவனத்தில்கொண்டு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.